1984 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சட்டப் பிரகாரம், என்ன அறிவிப்புகள் அவர்களுக்குத் தர வேண்டுமோ, அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆழ்குழாய்க் கிணறு வெட்டுவதற்கான மத்திய அரசின் நிதி உதவி.

93—(*வினா எண் 17863)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்குழாய்க் கிணறு வெட்டுவதற்காக மத்திய அரசு மாநில அரசிற்கு உதவித் தொகை அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணம் முழுமையும் செலவு செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): ஆம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்காக பணம் ஒதுக்கியதாகத் தெரிகிறது. எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும், ஆழ்குழாய்க் கிணறுகளுக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மத்திய அரசு, அந்தக் கிராமக் குடிநீர்த் திட்டம் வறட்சி நிவாரணப்பணி பிரச்னைகள், குடிதண்ணீர் வசதி அளிக்க, துளைக் கிணறுகள் போடுவதற்கு, அரசு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ், 1982—83-ல் ரூ.12.22 கோடி, 1983—84-ல் ரூ.7.94 கோடி ஆக ரூ. 20.16 கோடி வழங்கி யிருக்கிறது.

துரிதப்படுத்தப்பட்ட ஆக்சலரேடட் ஸ்கீம்—அந்தத் திட்டத்தின் கீழ் 1982—83-ல் ரூ. 8.56 கோடியும், 1983—84-ல் 6.94 கோடியும், ஆக ரூ. 15.50 கோடி கொடுத்திருக்கிறது. இத்துடன் 348 திட்டங்கள் ஊக்குவிக்கும் திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்படும். அதற்காக ரூ. 4 கோடி கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. வே. இராஜசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பணம் ஆழ் துளைக் கிணறு களுக்காக சென்னை நகரத்திற்காக எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது? சென்னை நகரில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளனவா, எத்தனை கிணறுகள்? எந்தெந்தப் பகுதிகளில் தோண்டப்பட்டுள்ளது, இவைகளில் எவ்வளவு உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதனை அறிவிக்க இயலுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சென்னை நகரில் எத்தனை ஆழ் துளைக் கிணறுகள் போடப் பட்டுள்ளன, எவ்வளவு மார்க்–2 பம்புகள் போடப்பட்டுள்ளன? எவ்வளவு லாரிகள் ஓட்டப்பட்டுள்ளன? எவ்வளவு டாங்குகள் போடப்பட்டுள்ளன? போன்ற தகவல்களுக்கு எல்லாம் ஒரு தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தருகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, இந்த ஆழ் துளைக் கிணறுகள் போடுவதன் மூலமாக, போர்கள் போடுவதன் மூலமாக ஓரளவு குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப் பட்டிருப்பதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆழ் துளைக் கிணறுகள் போடுவதற்காக தனித்தனியாக செலவழிக்கப்படுகிறதே, அவைகளை எல்லாம் மாற்றி அமைத்து, ஒரு காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்—என்ற அடிப் படையிலே ஒரு இணைப்புத் திட்டமாக, பல கிராமங்களை இணைத்து குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கமுடியுமா? தெரிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களை அமல் நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சோர்ஸ், தண்ணீர் கிடைக்கும் இடத்தைப் பொறுத்தும், எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதைப் பொறுத்தும், மக்கள் தொகையைப் பொறுத்தும், கிராமங்கள் இருக்கக் கூடிய நெருக்கடியான இடத்தைப் பொறுத்தும், தனித்தனியான திட்டம், காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் என்ற அளவிலே போடப் பட்டிருக்கிறது. அதைச் சீரமைத்துச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் சிலஇடங்களில் இருக்கின்ற எதிர்ப்பின் காரணமாக, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே, ஏன் இந்த ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு போகும்படியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ரொம்ப கஷ்டமான பிரச்சினை தான். இப்படிப்பட்ட செபரேட் காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் போடப்பட்டாலும் அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள், காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்—திட்டத்திற்கு ஒத்துழைப்பு, தெரிவிக்கக்கூடிய வகையில், மக்களைத் தயார் செய்து, பக்குவப்படுத்த வேண்டுமென்று அரசின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லு கின்ற பதிலில் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இந்தக் குடிநீர்ப் பிரச்சனை காரணமாக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு குடிநீருக்காக போடப்பட்ட குழாய்கள், டாங்குகள், கைப்பம்புகள், தற்போது உபயோகப்படுத்தப்

1984 பிப்ரவரி 20]

படாமல் கேட்பாரற்று கிடக்கின்றன. அவைகள் எல்லாம் வீணாகப் போகக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. எனவே இவைகளை எல்லாம் எடுத்து, அரசின் சார்பிலே ஏலம் போட்டு, அரசுக்கு வருவாய் வரக்கூடிய வகையில் அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜசேகரன் அவர்களும், இளையபெருமாள் அவர்களும் சென்னை நகரிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரம்ப தகவல்களைக் கொடுக்கவேண்டும் என்று தான் நான் ஆசைப்படுகிறேன். எல்லாவிதமான தகவல்களையும், எத்தனை குழாய்கள் போடப்பட்டன, எவ்வளவு லாரிகள் ஓட்டப்பட்டன, எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது, போன்ற விவரங்களைத் தருவதற்கு, ஒரு அவசர கால வினாவாகப் போட்டால்கூட (குறுக்கீடு) தனிக்கேள்வியாக போட்டால் கூட பதில் தர தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும், உறுப்பினர் இளையபெருமாள் கேட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

சென்னையிலுள்ள விம்கோ தொழிற்சாலை நிறுவனம்.

94—(*வினா எண். 20119)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விம்கோ தொழிற்சாலை (WIMCO LIMITED) நிறுவனத்தினர் அடிக்கடி தொழிற்சாலையை மூடி வருவதன் காரணமாக அரசு தலையிட வேண்டி மேற்படி தொழிற்சங்கத் தலைவரிடமிருந்து அரசுக்கு மனு அனுப்பப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னையிலுள்ள விம்கோ தொழிற்சாலை நிர்வாகம் தங்கள் நிறுவனத்தை மூடிவிடுவதாக இதுவரை எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்கவில்லை. மூடுதல் குறித்து நேரடியாக எந்தவித தொழிற் தகராறும் இந்த துறை முன் எந்த ஒரு தொழிற்சங்கத்தின் மூலமும் எழுப்பப்படவில்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

1982–83 ஆம் நிதியாண்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் விற்பனை செய்த துணிகளின் மதிப்பு.

95—(* வினா எண் 18453)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—